DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -16

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. காசியம்மாள் | Caste: |
| Husband's Name: | திரு. ரங்கநாதன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 9th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 09.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கீழ தெருவில் வசித்து வருகிறேன். கொலைசெய்யப்பட்ட 5 நபர்களையும் எனக்கு தெரியும். எனக்கு 3 குழந்தைகள். 2 மகன்கள் மற்றும் ஒரு மகள். எனது மூத்தமகனின் பெயர் தணிகாசலம், இளைய மகன் ஜெய்சங்கர், மகள் பெயர் சசிகலா. ஆஜர் எதிரிகளை எனக்கு யார் என்று தெரியாது. 9 ஆம் எதிரியையும் எனக்கு யார் என்று தெரியாது.

எங்கள் ஊரில் கொலைசெய்யப்பட்ட தேசிங்குபாலன் என்பவர் எனது ஊரை சேர்ந்தவர். அவர் எனது உறவினர் இல்லை. எங்கள் ஊரை சேர்ந்த ஜெயக்கொடி மற்றும் அ.சா.15 ஜானகி ஆகியோரை தெரியும். இவ்வழக்கு சம்பவ சமயத்தில் நான் ஊரில் இல்லை. சம்பவம் நடந்து 10 தினங்கள் கழித்து தான் கிராமத்திற்கு வந்தேன். கிராமத்தில் கொலை நடந்துவிட்டதாக சொன்னார்கள். எனவே நான் மறுபடியும்

வெளியூருக்கு போய்விட்டேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையில் நான் எங்கள் ஊரில் காசிநாதன் குடும்பத்தினருக்கும், எதிரி ரவிச்சந்திரன் குடும்பத்தினருக்கும் 10 ஆண்டுகளாக இருபிரிவுகளாக இருந்துவந்தார்கள் என்றும், காளியம்மன் கோவில் கட்டியது சம்மந்தமாக இருதரப்பினருக்கும் பிரச்சனை 2007 ஆம் ஆண்டு ஏற்பட்டது என்றும், காசிநாதன் குடும்பத்தினரால் ரவிச்சந்திரன் தரப்பை சேர்ந்த தேசிங்குபாலன் கொலைசெய்யப்பட்டார் என்றும், அந்த வழக்கு சம்மந்தமாக காசிநாதன் குடும்பத்தினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் சிறைக்கு சென்று பின்னர் பெயிலில் ஊருக்கு வந்தார்கள் என்றும், அதன்பின்னர் காசிநாதன் குடும்பத்தினர் கிண்டல்செய்து ஏலனமாக பேசுவது போன்ற செயல்களில் ஈடுபட்டதாகவும், அதனால் எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், காளிதாசன், பாரதிதாசன் மற்றும் அவர்களை சேர்ந்தவர்கள் அடிக்கடி ஒன்றுகூடி காசிநாதன் குடும்பத்தினரை அழித்துவிடவேண்டுமென்று பேசி வந்ததாகவும், வழக்கு சம்பவத்திற்கு சுமார் 2 மாதங்களுக்கு முன்பாக ஒருநாள் மாலை 4.00 மணியளவில் நானும், காசிநாதன் மனைவி ஜானகியும், ஜெயக்கொடி என்பவரும் வெளிதெருவிற்கு போய்விட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது சவுக்கு தோப்பில் பேச்சுகுரல் கேட்டு நாங்கள் மூவரும் மறைந்திருந்து பார்த்தபோது எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், பழனிசாமி, ராஜதுரை, தினேஷ், திருவாளப்புத்துாரான் ரமேஷ், சிலம்பரசன், பாஸ்கர், சசிகலா, கனகவள்ளி, சக்திவேல் மகன் ரமேஷ், பிரபாகரன், பாரதிதாசன், ஸ்ரீதர், காளிதாஸ், ஜவகர்பாபு, விஜய், சுரேஷ் மற்றும் சிலர் கும்பலாக உட்கார்ந்து கொண்டு காசிநாதன் குடும்பத்தை அடியோடு ஒழித்துக்கட்டவேண்டும் என்று பேசியதாகவும், அப்போது எதிரி சசிகலா என் புருசனை கொன்றுவிட்டு காசிநாதன் குடும்பத்தினர் ஜாலியாக

இருக்கிறார்கள், அவரது குடும்பத்தை அடியோடு அழித்தால் தான் என் புருசன் ஆத்மா சாந்தியடையும், அவரது குடும்பத்தை வெட்டி சாயுங்கள், காசிநாதன் குடும்பம் எப்போது அழியுமோ அதன் பிறகு தான் நான் பொட்டு, பூவை அழிப்பேன், என் தாழியை அறுப்பேன் என்று ஆவேசமாக பேசியதாகவும், அதனை கேட்டு நாங்கள் பயந்துகொண்டு அங்கிருந்து போய்விட்டதாகவும் நான் காசிநாதனிடம் பிள்ளைகளை எங்கு அனுப்பினாலும் தனியாக அனுப்பவேண்டாம் ஒன்றாக அனுப்புங்கள் என்று சொன்னதாகவும் சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் 16.05.2008 அன்று காலை 10.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது டேய் வெட்டுங்கடா, வெட்டுங்கடா என்று எதிரி சசிகலாவின் சத்தம் கேட்டதாகவும், நான் ஓடிவந்து பார்த்தபோது, எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், பழனிசாமி, பிரபாகரன், ராஜதுரை, தினேஷ், ரமேஷ், பாஸ்கரன், திருவாளப்புத்தூரான் ரமேஷ், சிலம்பரசன், சசிகலா, கனகவள்ளி, காளிதாஸ், ஸ்ரீதர், விஜய், ஜவகர்பாபு, சுரேஷ் ஆகியோர் கத்தி மற்றும் அரிவாளுடன், குளித்துவிட்டு வந்துகொண்டிருந்த சுரேஷ், பிரபு, மகாலிங்கம், ரமேஷ் ஆகியோரை துரத்திகொண்டு ஓடியதாகவும், பிரபுவை எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பட்டாகத்தியால் மாறிமாறி வெட்டியதாகவும், சுரேசை எதிரிகள் ரவிசந்திரனும், திருஞானமும் மாறிமாறி வெட்டியதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை தனியாக வெட்டிஎடுத்து பின்னர் எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் அத்தலையை உதைத்துக்கொண்டே தள்ளிக்கொண்டு ஓடியதாகவும், சுரேஷ் இறந்துவிட்டதாகவும், சிறிது நேரம் கழித்து நான் காசிநாதன் வீட்டிற்கு சென்று பார்க்க மகாலிங்கம், தர்மலிங்கம், காசிநாதன் ஆகியோர் வெட்டுகாயங்களுடன் இறந்துகிடந்ததாகவும், தர்மலிங்கத்தின் உடல் தலையில்லாமல் கிடந்ததாகவும், அவரது தலையானது காளியம்மன் கோவில் முன்பு இருந்த சூலத்தில் குத்தப்பட்டிருந்தது என்றும், கோவிலின் பின்புறம் பிரபுவின் தலை இருந்தது என்றும், தர்மலிங்கத்தின் தலையை எதிரி ரமேஷ் த/பெ.சக்திவேல் சூலத்தில் குத்தியதாகவும், பிரபுவின் தலையை எதிரி பழனிசாமி காளியம்மன் கோவிலுக்கு பின்புறம் வைத்ததாகவும், எதிரிகள் அனைவரும் திட்டம்போட்டு மேற்கண்ட 5 கொலைகளை

செய்தார்கள் என்றும், எதிரி சசிகலா தனது சபதத்தை நிறைவேற்றி கொண்டார் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் உண்மை சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 9 ஆம் எதிரி சசிகலா எனது மகள் என்றால் சாட்சி முதலில் இருமுறை அச்சங்கதியை மறுத்துவிட்டு, பின்னிட்டு அவர் தனது சொந்த மகள்தான் என்று ஒப்புக்கொள்கிறார். 9 ஆம் எதிரி எனது மகள் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அனைத்து எதிரிகள் தரப்பிலும் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

கேள்வி – நான் எனது முதன்மை சாட்சியத்தில் முதல்பத்தியில் சொன்ன சசிகலா என்பவர் தான் ஆஜர் 9 ஆம் எதிரியா என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்று ஒப்புகொண்டுவிட்டு பின்னிட்டு யோசனையின் பேரில் மாற்றி அவர் 9 ஆம் எதிரி இல்லை என்று சொல்லுகிறார். சாட்சி தற்போது தனக்கு இரண்டு மகள்கள் இருப்பதாகவும், ஒரு மகள் பெயர் சசிகலா என்றும் மற்றொரு மகள் பெயர் மாலதி என்றும் சொல்லுகிறார். ( முதலில் சாட்சி தனது இரண்டாவது மகளின் பெயர் ராணி என்று சொல்லிவிட்டு பின்னிட்டு மாற்றி மாலதி என்று சொல்லுகிறார்.)

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.